(பேரவைத் தலைவர்) [1993 ஏப்ரல் 22

(குறுக்கீடுகள்) வேறு ஒன்றும் அல்ல. அங்கிருந்த ஒரு பெயர்ப் பலகை மேலேயிருந்து மதுவிலக்குத் துறை ஆணையர் அவர்கள் மீது விழுந்தது.

பேரவையைப் பராமரிக்கின்ற பொதுப்பணித்துறை ஊழியர்களை ஆங்காங்கே சுவர்களிலே மாட்டப்பட்டிருக்கின்ற படங்களுக்கு கீழே இருக்கின்ற பலகைகள் முதலியவை சரியாக இருக்கிறதா என்பதைப் பேரவை முடிந்த பின்னர் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் ஆகாது. தினசரி சரிபார்க்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், புதுப்பாக்கம் கிராமம் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் தொழிற்சாலைக் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர்: திரு. ம. தனபால் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் புதுப்பாக்கம் கிராமத்தில் உள்ள ஒயிட் ஹவுஸ் பிரசாஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் செங்கல்பட்டு தாலுக்கா புதுப்பாக்கம் கிராமத்தில் ச. எண். 43/4-ல் திருவாளர்கள் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1991 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 2.5 டன் நெய்த உள்ளாடை துணிகள் வெளுக்கப்பட்டு சாயம் ஏற்றும் பணிகள் நடைபெற்று

வருகின்றன. இவ்வாலை நாளொன்றிற்கு 150 கிலோ லிட்டர் நீரை செயல்முறைப் பணிக்கும் 3 கிலோ. லிட்டர் நீரை அன்றாடத் தொழிற்சாலை நலப் பணிகளுக்கும் பயன்படுத்துகிறது. இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றிற்கு 3 கி. லிட்டர் கழிவு நீரும் 1.50 கி. லிட்டர் தொழிற் கழிவு நீரும் வெளியேற்றப் படுகின்றது.

இத்தொழிற்சாலை அதன் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய கீழ்க்கண்ட அலகுகளைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கொண்டுள்ளது :—

(1) சேகரிப்புத் தொட்டி.

(2) இரசாயனப் பொருட்களை கலப்பான்.

(3) பிளாகுலேட்டர்.

(4) முதல்நிலை தெளியவைப்பான்.

(5) காற்றேற்றும் தொட்டி.

(6) இரண்டாம் நிலை படிய வைக்கும் தொட்டி

(7) அழுத்த மண் வடிப்பான்.

(8) தெளியவைப்பான்.

(9) சேகரிப்புத் தொட்டி.

(10) துரித கரிக்கட்டி வடிப்பான்.

(11) சேறு உலர்த்தும் பலகை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர் நிலத்தில் பாசனத்திற்காகவும் நிலத்தில் தேக்கப்பட்டு உறிஞ்சுவதற்காகவும் பிரித்து பகுதியாக விடப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரை பாசனத்திற்கு பயன்படுத்த இத் தொழிற்சாலை 4.0 ஹெக்டேர் நிலத்தை வைத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட இத் தொழிற்சாலைக் கழிவு நீரை பகுப்பாய்வு செய்ததில் நீரில் கலந்த திடப்பொருள், குளோரைடு, சி.ஓ.டி. ஆகியவை வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளை மிஞ்சியுள்ளது என்பது அறியப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை சுத்திகரிப்பு நிலைய உறுதியான செயல்பாட்டிற்காக வைப்புத் தொகையாக ரூ. 1.5 இலட்சம் செலுத்தியுள்ளது. தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரிய தர நிர்ணய அளவுகளை அடையும் தொழிற் சாலை கழிவு நீரை சுத்திகரிக்க கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய செயல்பாட்டை மேம்படுத்த இத்தொழிற் சாலை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத் திலிருந்து வெளியேற்றப்படும் 80 கிலோ சேறு தொழிற் சாலையின் சொந்த நிலத்தில் சேமிக்கப்படுகின்றது. 1974-ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப் பாடு) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஒப்புதலைக் கோரி இத்தொழிற்சாலை விண்ணப்பித்தது. வாரியம் தனது இசைவினை 31—3—1993 வரை வழங்கியுள்ளது. மாத மொருமுறை இத்தொழிற்சாலை ஆய்வு செய்யப்பட்டு சுத்தி கரிக்கப்பட்ட கழிவு நீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படு கின்றன. இத்தொழிற்சாலை வாரியத்தால் முனைப்பாக கண் காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கையைப் படித்தேன். அறிக்கையில் இத்தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரிக்க தேவையான அலகு களைக் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை இயக்குவதையும், அந்த சுத்திகரிப்பு நிலையத்திலேயிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரில் திடப்பொருள்கள், குளோரைடு, சி. ஓ. டி. ஆகியவை கள் அதிகமாக இருக்கின்றது என்பதையும் அறிந்தேன். சுத்தி கரிப்பு நிலையத்தினுடைய செயல்பாட்டை மேம்படுத்துவதின் மூலம் அவை சரிசெய்யப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது, அப்படி சரிசெய்யப்படுகின்ற போது, அங்கே கிராமப் பகுதியிலே பொது கிணற்றிலே ஏற்கனவே குடிநீர் நச்சு நீராக மாறியுள்ள ஒரு தன்மை இருக்கிறது. அந்தத் தன்மை எவ்வகையிலே சரி செய்யப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சுத்திகரிப்பு நிலையம் ஒழுங்காகச் செயல் பட்டால் இந்தப் பிரச்சினை ஏற்படாது என்று கருதுகிறேன், இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டவுடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் அதைப் பற்றித் தெரிவித் திருக்கிறேன். எனவே. அதன் மீது நடவடிக்கை எடுத்தால் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கிடையாது, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கூடாது, அடுத்த கவன ஈர்ப்பு' திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இருக்கையில் இல்லை.